# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இலங்கை தகவல் தொழினுட்பவியல் தொழிற் சம்மேளனம் (கூட்டிணைத்தல்)

**இலங்கை தகவல் தொழினுட்பவியல் தொழிற் சம்மேளனத்தைக்**
**கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*காலி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண அவர்களால் 2013, நவெம்பர் மாதம் 29 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2013, ஒற்றோபர் மாதம் 28 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *277 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## இலங்கை தகவல் தொழினுட்பவியல் தொழிற் சம்மேளனம் (கூட்டிணைத்தல்)

## இலங்கை தகவல் தொழினுட்பவியல் தொழிற் சம்மேளனத் தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"இலங்கை தகவல் தொழினுட்பவியல் தொழிற் சம்மேளனம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான இலாபமீட்டா ஒழுங்கமைப்பொன்று, (கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத) தகவல் மற்றும் தொடர்புகள் தொழினுட்ப வியல் தொழிலின் ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நலன்களை மற்றவற்றுக்கிடையில் மேம்படுத்தும், ஊக்குவிக்கும், வளர்க்கும் மற்றும் பாதுகாக்கும் குறிக்கோளுடனும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திடமானதும் நலம்வாய்ந்தது மான தகவல் மற்றும் தொடர்புகள் தொழினுட்பவியல் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு உதவுவதற்கும், சொல்லப்பட்ட சம்மேளனத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் நிறைவேற்றிக் கொண்டு நடாத்துவதற்கும் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட சம்மேளனம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் 1996 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக் கப்படுவதற்கு விரும்புகின்றதாதலாலும், சட்டத்தின் மூலம் அத்தகைய கூட்டிணைப்புக்கு ஏற்பாடு செய்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை தகவல் தொழினுட்பவியல் தொழிற் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

இலங்கை தகவல் தொழினுட்பவியல் தொழிற் சம்மேளனத்தைக் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "சம்மேளனம்" அல்லது "இததொதொச" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை தகவல் தொழினுட்பவியல் தொழிற் சம்மேளனத்தின்" தற்போதைய

உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் இததொதொ சம்மேளனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகைய ஆட்கள் குழு, (இதனகத்துப்பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ''இலங்கை தகவல் தொழினுட்பவியல் தொழிற் சம்மேளனம்'' என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தலும் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் ; பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள்.

**3.** (1) கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) தகவல் மற்றும் தொடர்புகள் தொழினுட்பவியல் தொழிலின் ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் (அத்தகைய குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவாக விருப்பினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி) அபிவிருத்தியை மேம்படுத்துதலும், ஊக்குவித்தலும், வளர்த்தலும், அதன் நலன்களைப் பாதுகாத்தலும் ;

(ஆ) தகவல் மற்றும் தொடர்புகள் தொழினுட்பவியல் தொழிலின் ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்காக மதியுரைசார், ஆலோசனைசார் அல்லது ஒருங்கிணைத்தற் குழுவாகச் செயலாற்றுதல் ;

(இ) தகவல் மற்றும் தொடர்புகள் தொழினுட்பவியல் தொழிலின் உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துதலும் (அத்தகைய குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருப்பினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி) மற்றும்

இலங்கை அரசாங்கத்துடன் கழகத்தின் எல்லாக் கலந்துரையாடல்களிலும் தொழில்சம்பந்தமான எல்லாக் கருமங்கள்மீதும் பேச்சுவார்த்தை நடாத்துதலும் ;

(ஈ) கருத்துக்கள், அறிவு, அனுபவம் என்பவற்றின் பரிமாறலை வசதிப்படுத்தும் நோக்குடன் ஒத்த குறிக்கோள்களையுடைய ஏனைய குழுக்களை மேம்படுத்துதலும் அவற்றுடன் இணைதலும் ;

(உ) பொதுமக்களின் நம்பிக்கையையும் மதிப்பையும் விருத்தி செய்யும்வகையில் தொழிலினால் பின்பற்றப்பட வேண்டிய நடத்தைக்கோவைகளை வகுத்தமைத்தலும், பேணுதலும், வெளியிடுதலும் தகவல் மற்றும் தொடர்புகள் தொழினுட்பவியல் தொழில்பூராவும் நடத்தை, சேவை மற்றும் செயல்நிறைவேற்றம் தொடர்பில் உயர்வான நியமங்களை மேம்படுத்துதலும் ஊக்குவித்தலும் ;

(ஊ) கூட்டுத்தாபன உறுப்பினர்களுக்கான வேலை மற்றும் நடத்தை தொடர்பான ஒழுக்கவியல்சார் மற்றும் உயர்தொழில்சார் நியமங்களை ஊக்குவித்தலும், வளர்த்தலும், அவற்றை மேம்படுத்துவதற்கு அவசியமானவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தலும் ;

(எ) தகவல் மற்றும் தொடர்புகள் தொழினுட்பவியல் தொழிலின் நன்மைக்காகவும் சீராக்கத்துக்காகவும் ஆன முறைகளையும் தொழினுட்பங்களையும் சேகரித்தலும் சரிபார்த்தலும், அவைபற்றிய தகவல்களையும் கருத்துக்களையும் பகிர்ந்தளித்தலும் ;

(ஏ) இததொதொ சம்மேளனத்தினதும் தகவல் மற்றும் தொடர்புகள் தொழினுட்பவியல் தொழிலினதும் நலன்களை மேம்படுத்தும் நோக்குடன் அரசாங்கத்

துடன் அல்லது எவையேனும் பகிரங்கக் குழுக்களுடன் இணைந்து செயலாற்றுதல் ;

(ஐ) தகவல் மற்றும் தொடர்புகள் தொழினுட்பவியல் தொழிலின் நலன்களை மேம்படுத்துவதற்கென, நிறைவேற்றுப் பேரவையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு செயற்பாடுகளில் ஈடுபடுதல் ; அத்துடன்

(ஒ) மேலேயுள்ள குறிக்கோள்களை எய்துவதன் இடைநேர் விளைவான அல்லது அதற்கு உகந்தனவான அத்தகைய வேறெல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**4.** (1) கூட்டுத்தாபனமானது, இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றின் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது உகந்தனவான அல்லது அதன் இடைநேர்விளைவான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்குமான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிக்கலாம் மற்றும் நிறைவேற்றலாம் :-

(அ) ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவண அளிப்பு என்பவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையாக அதற்குரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வதற்கும், வைத்திருப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் ;

(ஆ) அத்தகைய ஏதேனும் ஆதனத்தை அல்லது அத்தகைய ஆதனத்தின் பகுதியை அல்லது பாகத்தை விற்பனை செய்வதற்கும், ஈடுவைப்பதற்கும், குத்தகைக்குக் கொடுப்பதற்கும் அல்லது மானியக் கொடையாக அளிப்பதற்கும், உரிமைமாற்றுவதற்கும், இறுதிவிருப் பாவண முறையில் அளிப்பதற்கும், சாட்டுதல் செய்வதற்கும், கொடுத்து மாற்றுவதற்கும் அல்லது வேறுவகையாகக் கையுதிர்ப்பதற்கும் ;

(இ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பணங்களை நிறைவேற்றுப் பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய பிணையங்களில் முதலீடு செய்வதற்கும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக, வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கும், தொழிற்படுத்துவதற்கும், மூடுவதற்கும், கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தைப் பிணைப்பொறுப்பாகவைத்து அல்லது அத்தகைய பிணைப்பொறுப்பின்றி, பணம் கடன்பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் ;

(உ) உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் நிதிகளைத் திரட்டுவதற்கும், காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெறுவதற்கும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் மிகச்சிறந்த நலன்களைக்கருதி எவையேனும் மேன்மிகையாகவுள்ள நிதிகளைத் தோதானவொரு முறையில் முதலீடு செய்வதற்கும் ;

(எ) நிறைவேற்றுப் பேரவை தகுதியானதெனக் கருதுகின்ற வாறான அத்தகைய மதியுரைச் சபையைத் தாபிப்ப தற்கும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்கும் அத்தகைய

அலுவலர்களையும் சேவையாளர்களையும் பதவிநீக்கஞ் செய்வதற்கும், அவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் ; அத்துடன்

(ஐ) வேறு ஒழுங்கமைப்புக்கள், தன்னிச்சையான குழுக்கள் மற்றும் நியதிச்சட்டமுறையான அதிகாரசபைகள் என்பவற்றுடன் ஒத்துழைப்பதற்கும், தகவல் பரிமாறுவதற்கும், மதியுரையளிப்பதற்கும் அல்லது மதியுரை பெறுவதற்கும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிறைவேற்றுப் பேரவையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும். இப்பேரவை, 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபன விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப் படக் கூடியவர்களான பதவிதாங்குநர்களையும் அத்தகைய வேறு உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) முதலாவது பேரவை, இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவிவகிக்கின்ற நிறைவேற்றுப் பேரவையாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6**. (1) ஏதேனும் கூட்டத்திலும், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டும் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றுள் எதற்கும் இச்சட்டத்தின் அல்லது வேறு எழுத்திலான சட்டத்திலான ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கஞ்செய்தல் அத்துடன் உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல், அவர்களை விலக்குதல் அல்லது அவர்கள் பதவி நீங்குதல் ;

(ஆ) உறுப்பினர்களை நியமித்தல், அவர்கள் பதவி நீங்குதல், பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள், நடத்தை மற்றும் கடமைகள் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும், பணிகளும் ;

(ஈ) நிறைவேற்றுப் பேரவையின் கூட்டங்களில் அத்துடன் அல்லது உறுப்பினர்களின் கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையும், அவற்றைக் கூட்டுதலும் நடாத்துதலும், அத்தகைய கூட்டங்களுக்கான நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும் மற்றும் நிகழ்ச்சிநிரலும், அவற்றுக்கான கூட்டநடப்பெண்ணும், அவற்றில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும், அதன் நிதிகளின் கட்டுக்காப்பும், அதன் கணக்குகளைப் பேணுதலும் கணக்காய்வு செய்தலும் ;

(ஊ) மதியுரைச்சபையை நியமித்தலும் மதியுரைச் சபையிடமிருந்து மதியுரை பெறுவதற்கான முறையும் நடவடிக்கை முறையும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட விதி எதுவும், அதே போன்ற கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது ஒழிக்கப்படலாம்.

(3) நிறைவேற்றுப் பேரவையின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தொழுகுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7**. கூட்டுத்தாபனத்தின் நிதியம் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று இததொதொ சம்மேளனத்தின் வரவுக்கிருக்கும் எல்லாப் பணங்களும் ; இவை, அத்திகதியிலிருந்து கூட்டுத்தாபனத்துக்குக் கைமாற்றப்பட்டனவாதல் வேண்டும் ;

(ஆ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்குப்பின்னர் இததொதொ சம்மேளனத்துக்கு வருமதியான முதலீடுகளிலிருந்து அல்லது வேறு பெறுகைகளிலிருந்து கூட்டுத்தாபனத்துக்குத் திரளக் கூடிய எல்லாப் பணங்களும் ; அத்துடன்

(இ) கூட்டுத்தாபனத்தின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றும் நோக்கத்துக்காகக் காலத்துக்குக் காலம் அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் மானியக்கொடை.

நிதியத்திலிருந்தான கொடுப்பனவுகள்.

**8**. (1) பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டுக்கும் பேணுகைக்கும் அவசியமான செலவுகள் ;

(ஆ) அலுவலர்கள், சேவையாளர்கள் மற்றும் ஏனைய ஊழியர்களுக்குச் சம்பளங்களினதும் ஊக்குவிப்புக்களினதும் கொடுப்பனவு ; அத்துடன்

(இ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்கு அவசியமென நிறைவேற்றுப் பேரவையினால் அங்கீகரிக்கப்படுகின்றவாறான அத்தகைய வேறெல்லாக் கொடுப்பனவுகளும்.

(2) எவ்வாறாயினும் பெறப்பட்ட, கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனமும், மேலே குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கும் மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்

பதுடன், அதன் பாகமெதுவும், கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் களுக்கு நேரடியாகவோ நேரடியாகவல்லாமலோ பங்கிலாபம், மிகையூதியம் அல்லது எத்தகையதுமான வேறெவ்வகையிலும் செலுத்தப்படுதலோ கைமாற்றப்படுதலோ ஆகாது.

மதியுரைச் சபை.

**9.** (1) நிறைவேற்றுப் பேரவையினால் நியமிக்கப்பட்ட மதியுரைச் சபையொன்றிருத்தல் வேண்டும்.

(2) (123 ஆம் அத்தியாயமான) சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றாகவுள்ள இன்பொடெல் லங்கா சொசாயட்டி லிமிற்றெற்றினதும் பேரவை உறுப்பினர்கள், கூட்டுத்தாபனத்துக்காக மதியுரைச் சபையில் சேவையாற்றலாம்.

கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட வுள்ளனவும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட வுள்ளனவுமான கடன்கள்.

**10.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளதான இததொதொ சம்மேளனத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டு மென்பதுடன், அந்நாளன்று இததொதொ சம்மேளனத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

இததொதொ சம்மேளனத்தின் ஒப்பந்தங்கள் முதலியன கூட்டுத்தாபனத்தினதாகக் கருதப்படுதல்.

**11.** இச்சட்டம் நடைமுறைக்குவருவதற்கு நேர்முற்போந்த திகதியன்று உள்ளதான சொல்லப்பட்ட இததொதொ சம்மேளனத்தின் எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும், இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்து இத்தால் அமைக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் ஒப்பந்தங்களாகவும் உடன்படிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**12.** (1) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் ஆகக் குறைந்தது ஒரு தடவையேனும் பரிசோதனைசெய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், வருமான செலவினக் கணக்குகளினதும் ஐந்தொகையினதும் சரியாந் தன்மை, கூட்டுத்தாபனத்தினால் நிறைவேற்றப்பட்டவொரு

தீர்மானத்தின்மூலம் அவ்வாறு செய்வதற்கு அதிகாரமளிக்கப் பட்ட கூட்டுத்தாபனத்தின் இரு உறுப்பினர்களினால் கையொப்ப மிடப்பட்டு கூட்டுத்தாபனத்தினால் நியமிக்கப்பட்ட தகைமை பெற்ற கணக்காய்வாளரொருவரினால் உறுதிப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, கூட்டுத்தாபனத்தின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(3) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது -

(i) இலங்கைப் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்ற தனியாள் ஒருவர்; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்ற கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

**13.** கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்கக் ஆண்டாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு.

**14.** (1) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் இததொதொ சம்மேளனத்தினால் அல்லது அதற்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் இததொதொ சம்மேளனத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் இததொதொ சம்மேளனத்திற்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள், கூட்டுத்தாபனத்தின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழான நடவடிக்கைக்காக நிறைவேற்றுப் பேரவையின் உறுப்பினர்களையும் கூட்டுத் தாபனத்தின் அலுவலர்கள் முதலியவர்களையும் பாதுகாத்தல்.

(2) இச்சட்டத்தின்கீழ் அல்லது நிறைவேற்றுப் பேரவையின் பணிப்பின்மேல் இததொதொ சம்மேளனத்தினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாக கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் இததொதொ சம்மேளனத்துக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறாக இததொதொ சம்மேளனத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவு அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் இததொதொ சம்மேளனத்தினால் அறவிடப்பட்டாலொழிய, கூட்டுத்தாபன நிதிகளிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**15.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, தவிசாளரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டுமென்பதுடன், நிறைவேற்றுப் பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றவும்படலாம். நிறைவேற்றுப் பேரவையின் அனுமதியுடனன்றியும், பேரவையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றியும் இலச்சினையானது எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள்

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**16**. கூட்டுத்தாபனம், ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாகவரக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளுவதற்கும் வைத்திருப்பதற்கும் சட்டப்படி இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுமுள்ள முழுத்தத்துவத்துடனும் அத்தகைய எல்லா ஆதனங்களும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*நிறைவேற்றுப் பேரவையின் உறுப்பினருக்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் அலுவலர் முதலியவர்களுக்கு எதிராக அல்லது அவர்களின் ஆதனத்துக்கெதிராக எழுத்தாணையெதுவும் வழங்கப்படுதலாகாது.*

**17**. கூட்டுத்தாபனத்துக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கில் நிறைவேற்றுப் பேரவையின் எவரேனும் உறுப்பினருக்கெதிராக அல்லது கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலர், சேவையாளர் அல்லது முகவருக்கெதிராக அல்லது அவர்களின் ஆதனத்துக்கெதிராக எழுத்தாணையெதுவும் வழங்கப்படுதலாகாது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்